குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா. 6 சி.சி. எண். 22/2015

2023–ம் ஆண்டு ஜீலை 24–ம் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி 6–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. செங்கோடன் | ஜாதி | |
| தந்தை பெயர் | வரதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 11. 55 மணி,

Accused (Saravanan), present. Advocate Mr.P.Kathiravan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை**.

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2016 –ம் தேதி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 16.08.2014–ம் தேதி ஓமலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 10.00 மணியளவில் சாட்சி அய்யம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 730/2014 சட்டபிரிவுகள் 451,380 மற்றும் 15(3) மெடிக்கல் கவுன்சில் ஆக்ட் ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

2. அ.சா.ஆ.1 புகாரில் அ.சா.1 அய்யம்மாள் தனது கணவர் வீரமுத்துவிற்கு எதிரி சரவணன் மயக்க மருந்து கொடுத்து படுக்கவைத்து விட்டதாக குறிப்பிடவில்லை . எதிரி சரவணன் அ.சா.1 னை வீட்டிற்குள் அழைத்து சென்று மயக்க ஊசி போட்டு படுக்க வைத்து விட்டதாகவும், அதனால் அவருக்கு சம்பவம் நினைவில்லை என்றும் புகாரில்

குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

3. புகாரில் அ.சா.1 தனது வீட்டில் இருந்து எதிரி சரவணன் நெக்ஸ்சை எடுத்து சென்றதாக கூறியுள்ளாரா என்றால் பதக்க செயின் எடுத்து சென்றதாக மட்டும் தான் கூறியுள்ளார். புகாரில் அ.சா.1 2 பவுன் எடையுள்ள தோடுகள் மூன்று மற்றும் பணம் ரூ.32,000/த்தை எதிரி எடுத்து சென்றதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. பணம் ரூ.18,000/–த்தை எடுத்து சென்றதாக தான் குறிப்பிட்டுள்ளார்.

4. அ.சா.1 கொடுத்த புகாரை தட்டச்சு செய்து கொடுத்தார். போலீசார் எழுதிகொண்டதாக இல்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் 3–ல் சம்பவம் நடந்த நாள் 14.08.2014 என்றும், தகவல் கிடைத்த நாள் 16.08.2014 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு நாள் தாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கையின் 8–வது காலத்தில் "வாதியால் தாமதம் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன காரணத்தினால் தாமதமானது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் 7–வது காலத்தில் "சந்தேக எதிரி சரவணன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகாரை பெற்ற பின் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவத்தின் உண்மை தன்மைகளை அறிந்த பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

6. புகாரின் உண்மைதன்மை குறித்து அறியாமல் பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**இல்லை.

சாட்சி. செங்கோடன்

ஓம்/– S. சர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.